1989 மார்ச் 27]

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்து உண்மை. பல இடங்களில் வியாபாரிகளே ''போகஸ் கார்டுகளை'' வைத்துக் கொண்டு நல்ல அரிசி வருகிற போது அதை வாங்கி வெளிமார்க்கெட்டில் விற்றுக் கொண்டிருந்தார்கள். எந்த அளவுக்கு ''போகஸ் கார்டுகள்'' இருக்கின்றன என்பதைக் கண்டுபிடிக்க மாவட்ட ஆட்சித் தலைவர், கூட்டத்தை தஞ்சை மாவட்டத்தில் கூட்டி நடவடிக்கை எடுக்கச் சொன்னேன். அதன் காரணமாக, இது வரை 1,20,000-க்கும் மேற்பட்ட ''போகஸ் கார்டுகள்'' இருப்பது கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இப்போது தமிழ் நாடு முழுவதும் இருக்கிற மாவட்ட ஆட்சித் தலைவர்களையும் இவ்வாறு ''போகஸ் கார்டுகளைக்'' கண்டுபிடிக்கக் கேட்டுக் கொண்டிருக்கிறேன். தொடர்ந்து இது குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உணவு தொடர்பான வினா என்பதால் ஒவ்வொரு உறுப்பினரும் மிகுந்த ஆர்வத்தோடு கேட்பதை வரவேற்கிறேன். என்றாலும், நேரத்தின் அருமை கருதி, தற்போது கடைசித் துணை வினாவை மட்டும் அனுமதிக்கிறேன்.

திரு. என். பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரிசி ஆலை வியாபாரிகள் அரசுக்குச் செலுத்த வேண்டிய லெவியை, நியாய விலைக் கடைகளிலிருந்து அரிசியாக வாங்கி திரும்பவும் அரசுக்கே லெவியாகச் செலுத்துகிறார்கள். இதைத் தடுக்க மாண்புமிகு அமைச்சரவர்கள் தக்க நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி ஏற்கெனவே கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அதை எல்லாம் கண்டுபிடித்து, '' புட் செல்'' பிரிவில் இருக்கிற காவல் துறையினர் கடுமையான நடவடிக்கை எடுத்து, இப்போது அப்படி ரேஷன் அரிசியை அரசாங்கத்திற்கு லெவியாகக் கொடுக்கிற முறை இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

களத்தூர் பிர்க்காவில் தொழிற்பேட்டை.

3. (*வினா எண் 101)—திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

செங்கற்பட்டு தொகுதி, களத்தூர் பிர்க்காவில் தொழிற் பேட்டை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவர் அவர்களே, இல்லை.

திரு. எஸ். எஸ். தென்னரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு ஊரில் தொழிற்பேட்டை அமைப்ப தென்றால்—அரசாங்கம் நினைத்தாலே அமைக்க முடியுமா ? அல்லது சுற்றுப்புற சூழ்நிலையை அனுசரித்துத்தான் அது அனு மதிக்கப்படுமா ? அல்லது கனிமங்கள் கிடைத்தால்தான் தொழிற் பேட்டை அமைக்கப்படுமா ? இதில் அரசாங்கத்தின் கொள்கை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வினா செங்கற்பட்டு மாவட்டத் தின் ஒரு குறிப்பிட்ட பகுதியில் தொழிற்பேட்டை அமைப்பது குறித்ததாகும். அதுபற்றிய விவரம் தான் இங்கே இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் கேட்ட வினாவுக்கு விளக்கம் பெற விரும்பினால், தனியாகக் கேள்வி கேட்க வேண்டுமென்று தெரி வித்துக் கொள்கிறேன்.

திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சியால் வாடுகிற—22 ஆண்டுகளுக்கு மேலாக வும் வறட்சியையே இன்னும் எதிர்நோக்கிக்கொண்டிருக்கின்ற— களத்தூர் பிர்க்காவில் அவசியம் ஒரு தொழிற்பேட்டை அமைக் கப்பட வேண்டுமென்றுதான் நான் இந்த வினாவையே கொடுத் தேன். அப்படி அமைப்பதற்கு என்னென்ன தேவைகள் மூல காரணமானவை என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்தில் ஏற்கெனவே 9 இடங்களில் தொழிற்பேட்டைகளும், 14 இடங் களில் சிறு தொழிற்பேட்டைகளும் அமைக்கப்பட்டிருப்பதால், புதிதாகத் தொழிற்பேட்டை ஒன்றை களத்தூர் பிர்க்காவில் நிறுவும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மேற்கொண்டு விவரங்களைப் பெற விரும்பினால் அதற்குரிய யோசனைகளையும் வினாக்களை யும் முறையாக அரசிடம் சமர்ப்பிக்க வேண்டுகிறேன்,

(முற்பகல் 10-00)

தொண்டியில் மீன்பிடி துறைமுக வேலை.

4 .(* வினா எண் 468)—திரு. கே. ஆர். இராமசாமி : மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) இராமநாதபுரம் மாவட்டம், தொண்டியில் மீன்பிடி துறைமுக வேலை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணம் என்ன ?

(இ) வேலை மீண்டும் தொடங்க ஆவன செய்யப்படுமா ?